# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## OS.No. 244/2019

| | | |
|---|---|---|
| Name | : | திரு.இசக்கிமுத்து **Dw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of February 2026.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 8ம் பிரதிவாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 8 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 01.11.2012ம் தேதியிட்டு இறந்துபோன சுப்பையா நாடார் 7 முதல் 9 வரை பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த உயில் ஆவணம் பி.வா.சா.ஆ. 1 ஆகும். 2) 24.04.2019ம் தேதியிட்டு 8ம் பிரதிவாதி 4, 5 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதி கொடுத்த ஏற்பாடு

ஆவணத்தின் அசல் பி.வா.சா.ஆ. 2 ஆகும். 3) 24.04.2019 ம் தேதியிட்டு 7 ம் பிரதிவாதி தன் மகன்களான 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதி கொடுத்த ஏற்பாடு ஆவணத்தின் அசல் பி.வா.சா.ஆ.3 ஆகும். 4) 24.04.2019 ம் தேதியிட்டு 9 ம் பிரதிவாதி தன் மனைவியான 6 ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த ஏற்பாடு ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 4 ஆகும். 5) சுப்பையா நாடார் சண்முகத்தாய் அம்மாளின் குடும்ப கொடி வழி ஜாபிதா பி.வா.சா.ஆ. 5 ஆகும். 6) வழக்கு தபசில் சொத்திற்கு 1 முதல் 6 வரை பிரதிவாதிகள் செலுத்திய தீர்வை ரசீதுகள் பி.வா.சா.ஆ. 6 ஆகும். 7) வழக்கு தபசில் சொத்திற்கு 1 முதல் 6 வரை பிரதிவாதிகள் பெயருக்கு ஏற்பட் பட்டா பி.வா.சா.ஆ. 7 ஆகும். 8) 8 ம் பிரதிவாதி புளியரை காவல் நிலையத்தில் வாதி மீது கொடுத்த புகாரன் நகலும், அதற்கு காவல்நிலையத்தில் வழங்கிய புகார் மனு ரசீது பி.வா.சா.ஆ.8 ஆகும். பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi